[1978 மார்ச் 28]

மாயூரம் பஞ்சாயத்து

*689 வினு.— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் ஊராட்சி ஒன்றியம், மாயூரம் புறநகர் (ஊரக) பஞ்சாயத்தின் பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கலாமென தஞ்சை மாவட்ட அட்சியரின் 24-9-75-ம் தேதிய தாக்கீதின்படி அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 'மாயூரம்' ரெவின்யூ கிராமத்தின் பெயரை 'மயிலாடுதுறை' என்று மாற்றியமைக்க தஞ்சை மாவட்ட ஆட்சி தலைவரால் 7—11—75-ல் அனுப்பப்பட்ட செயற்குறிப்பு அப்போதிருந்த அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பஞ்சாயத்தின் பெயரை 'மயிலாடுதுறை' என மாற்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

திரு. என். கிட்டப்பா: துணைத் தலைவரவர்களே, இந்த மாயூரம் என்ற ரெவின்யூ கிராமத்தினுடைய பெயரை, மயிலாடுதுறை என்று மாற்றியமைக்க வேண்டுமென்ற குறிப்பை மாயூரம் கோட்டாட்சித் தலைவர், தஞ்சை மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களுக்கு அனுப்பிய நகல் ஒன்று என்னிடத்திலே கூட இருக்கிறது. அரசு ஏற்கனவே இதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டினார்கள். அங்கே மாயூரம் புறநகர் ஊராட்சி மன்றமும், மாயூரம் ஊராட்சி ஒன்றியமும் மாயூரம் நகராட்சியும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி யிருந்தும், மயிலாடுதுறை என்று மாற்றப்படாமல் இன்னமும் இருப்பது சரியல்ல என்பதை உணர்ந்து அரசு இனியேனும் தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த கடித போக்குவரத்து வருவாய்த்துறை வாரியத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இடையிலே நடந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையோடு அது தொடர்பு கொள்ளவில்லை. இருந்தாலும் ஊராட்சி ஒன்றியமும், நகராட்சி மன்றமும் இதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தகவல் கிடைத்திருக்கிறது. இது நீண்டகால கோரிக்கை. கிட்டப்பா அவர்களின் நியாயமான கோரிக்கை. நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதற்கு மயிலாடுதுறை வாழ் மக்களின் சார்பாக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல இந்த பெயர் மாற்றத்தினை

விரைந்து செயல் படுத்த, அண்மையிலே அமைச்சர் அவர்கள் மாயூரம் வந்தபோதுகூட மாயூரத்திற்கு எந்த வரம் கேட்டாலும் தரப்படும் என்று சொன்னுர்கள்—இந்த வரத்தை விரைவிலே நிறைவேற்றி கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது வரம் அல்ல, நியாயமான கோரிக்கை. நிறைவேற்றித்தருவது அரசின் கடமை.

கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து.

*690 வினு—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவர் சுல்தான் என்பவர் கடற்கரை ஓரங்களில் சிறிய கீற்றுக் கொட்டகைகளை அரசு நிலங்களில் அமைத்து வாடகையை விசைப்படகுகாரர்களிடம் வசூலிப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) சுல்தான் என்ற பெயரில் யாரும் கோட்டைப்பட்டினம் பஞ்சாயத்து தலைவராகப் பணியாற்றவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சுல்தான் என்கின்ற நபர் அந்தப் பகுதியில் அரசாங்க நிலங்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து, விசைப்படகுக் காரர்களுக்குக் கொடுப்பதாக என்னிடம் விவரங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கொடுக்கிறேன். அதன்மீது நடவடிக்கை எடுத்து அவற்றைக் காலி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சுல்தான் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர் இல்லை. அவருடைய பட்டா பூமி ஜகதாப்பட்டினம் கடற்கரை சமீபம் இருக்கிறது. இவருடைய பட்டா பூமி சர்வே எண் 169/3-ல் மூன்று சிறு ஓலைக் குடிசைகள் கட்டிக் கொடுத்திருக்கிருர். அதில் குடியிருப்பவர்கள் வாடகை எதுவும் கொடுக்கவில்லை என்று விசாரணையில் தெரிகிறது. ஆகவே நடவடிக்கை எடுக்க எந்தவிதமான காரணமும் இல்லை.